மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறில் கிளை நிலையம் அமைக்கின்ற மிக முக்கியமான பணி விரைவிலே தொடங்கியாக வேண்டும். நன்செய் நிலமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே நிலம் நமக்குப் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை. சத்திர நிலம் அரசின் பொறுப்பிலே இருக்குமானால், சோழன் போக்குவரத்துக் கழக நிருவாகிகளுக்குத் தெரிவித்து, அதை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அணுகி அந்த நிலத்தைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கிளை நிலையம் எவ்வளவு மதிப்பீட்டில் எப்பொழுது அமைக்கப்படும் என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான இடம் கிடைத்ததற்குப் பிறகு, இடத்தினுடைய பரப்பளவு, அங்கே வந்து நிற்கக்கூடிய பேருந்துகளினுடைய எண்ணிக்கை, வந்து செல்லக்கூடிய பயணிகள், அங்கு தங்கி ஓய்வு எடுக்கக்கூடிய தொழிலாளர்கள் ஆகியவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும்.

மகளிர் பேருந்துகளில் மகளிர் நடத்துநர்களை நியமித்தல்

*5098 திரு. சு. குருநாதன் :

திரு. சா. கணேசன் :

திரு. என் பழனிவேல் :

திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிர் பேருந்துகளில் மகளிர் நடத்துநர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 30 சதவீதம் கொடுக்க முன்வந்துள்ள இந்த அரசு மகளிரை ஓட்டுநர் வேலைக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடத்துநரா, ஓட்டுநரா? மூலக் கேள்வி நடத்துநர்.

திரு. சா. கணேசன். நடத்துநர்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு அரசுப் பணியில் 30 சத வீதம் கொடுப்பது என்கிற கொள்கையைப் பொறுத்தவரை, போக்கு வரத்துத் துறையில் ஏற்கெனவே எழுத்தர்களாக அல்லது இன்னும் பல்வேறு அலுவலகப் பணிகளிலே பெண்கள் ஈடுபடுத்தப் பட்டிருக்கிறார்கள், தேர்வு செய்யப்படவிருக்கிறார்கள். ஆனால் நடத்துநர் பணியைப் பொறுத்தவரையில், ஒரு சிரமமான பணி என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். இருந்தாலும் கூட பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஏற்கெனவே, 8 பெண்கள், 8 ஆண்டுகள், 9 ஆண்டுக் காலமாகப் பணியாற்றி வருகின்றார்கள். தொடர்ந்து இன்னும் சிலபேர் கண்டக்டர் 'லைசன்ஸ்' எடுத்து அவர்கள் இந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட வேண்டும் என்பதற்காக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இருக்கிறார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்ரீதர் அவர்கள் பலமுறை அரசுக்கு விண்ணப்பம் கொடுத்து, ஆலோசனைக் கூட்டத்திலே கூட அதை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தில் கூடுதலான கண்டக்டர்களை நியமனம் செய்யும்போது பெண்களை நியமனம் செய்யலாம் என்கின்ற யோசனை இப்பொழுது பரிசீலனையில் உள்ளது.

9—25 மணி

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர்-சிறுவர்களுக்கான சிறப்புப் பேருந்துகளில் பெண் கண்டக்டர்கள் இல்லாததால் அந்தப் பேருந்துகளில் பயணம் செய்கின்ற பயணிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே அந்தப் பேருந்துகளிலாவது கட்டாயம் பெண் கண்டக்டர்களை நியமனம் செய்ய, அரசு உத்தரவிட்டுள்ள முடிவினை மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மகளிர்-சிறுவர்களுக்கான பேருந்துகள் எல்லா இடங்களிலும், எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் இயக்கப் படுவதில்லை. குறிப்பாக, பல்லவன் போக்குவரத்துக் கழகம், ராணிமங்கம்மாள் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்கு வரத்துக் கழகம், அன்னை சத்தியா போக்குவரத்துக் கழகம்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆகிய கழகங்களிலே மட்டும்தான் குறிப்பிட்ட நேரத்தில், காலை நேரம் அல்லது மாலை நேரங்களில்தான் இப்படிப்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே எல்லா இடங்களிலும் போது மான அளவுக்கு, முழு நேரம் ஒட்டக்கூடிய அளவிற்கு அந்தப் பேருந்துகளுக்குக் கூட்டம் இல்லாது இருக்கின்ற காரணத்தால் முழு நேர ஊழியர்களாக பெண்களை அமர்த்துவது என்பது கடின மான காரியம்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் பேருந்துகளில் பெண் கண்டக்டர்களை நிய மிப்பதில், முழு நேரம் அவர்களைப் பயன்படுத்திட இயலாமல் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மற்ற நேரங்களில் பேருந்துகள் புறப் படும் இடங்களில் பயணிகளுக்கு முன்னதாகவே டிக்கெட் கொடுக்கின்ற பணியில் பெண்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள முடியும். அதற்கான செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஸ்டேண்ட் கண்டக்டர்ஸ் என்று சொல்லக்கூடிய அந்தப் பொறுப்புக்கு நெரிசல் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி களில் அத்தகைய பொறுப்புகளை உருவாக்கி அதிலேயும் பெண் கண்டக்டர்களை நியமிக்கலாம் என்கிற யோசனையும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பரிசீலனையில் இருந்து வரு கிறது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் பேருந்துகளில் மகளிரை நடத்துநர்களாக வைத்துக்கொள்வது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சிரமம் இல்லாமல் எந்த வேலையும் இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். என்றாலும் கண்டக்டர் வேலை பார்ப்பது என்பது பெரிய சிரமம் என்று நாங்கள் கருதவில்லை. ஆகவே, பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் மட்டுமல்லாமல் பல மாவட்டத் தலைநகரங்களில் மகளிருக்காக விடக்கூடிய அந்தப் பேருந்துகளிலும் பெண்களைக் கட்டாயமாக, கண்டிப்பாக நியமனம் செய்ய வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குறிப்பாக, நெரிசல் அதிகமாக இருக்கக்கூடிய வழித் தடங்களில் இரண்டு கண்டக்டர்களை நியமிக்க வேண்டுமென்ற முடிவு சமீபத்திலே பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலே எடுக்கப்பட்டுள்ளது. அப்படி இரண்டாவது கண்டக்டர்களாக நியமிக்கக்கூடியவர்களைப் பெண்களாக நியமிக்கலாம் என்ற யோசனையும் இருக்கிறது. அதேபோல, ஸ்டேண்ட் கண்டக் டர்ஸ், ஆங்காங்கே பஸ் ஸ்டாண்டில் நின்று முன்கூட்டியே

பயணச் சீட்டுகளை விற்கக்கூடிய வகையில் நியமிக்கக்கூடிய கண்டக்டர்களையும் பெண் கண்டக்டர்களாகவே நியமிக்கலாம் என்கின்ற யோசனையும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பரிசீலனையிலே இருக்கிறது. ஆகவே, கூடுமானவரை ஏற்கெனவே கண்டக்டர் லைசன்ஸ் எடுத்து வேலைவாய்ப்பின்றி இருக்கக்கூடிய அத்தகைய பெண்களுக்கு இந்த வேலைவாய்ப்பு நிச்சயமாகப் பயன்படும்.

பல்லவன் போக்குவரத்து கழகம் அரக்குச் செலுத்த வேண்டிய கடன்.

***6139 திரு. பி. என். வல்லரசு :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் அரசுக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் மற்றும் அதற்கான வட்டி, அபராத வட்டித் தொகை எவ்வளவு ?

(ஆ) இத்தொகையினை வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

	(ரூபாய் இலட்சத்தில்)
(அ) 31—3—1989-ல் நிலுவையில் உள்ள குறித்த காலக் கடன்கள்.	2,265.29
31—3—1989-ல் நிலுவையில் உள்ள வழிவகை முன்பணம்.	600.80
31—3—1989-ல் குறித்த கடன்கள் மீதான நிலுவையில் உள்ள வட்டி.	1,816.3
31—3—1989-ல் குறித்த கால கடன்கள் மீதான அபராத வட்டி.	15.51
31—3—1989-ல் வழிவகை முன்பணம் மீதான நிலுவையில் உள்ள வட்டி.	619.94
,, அபராத வட்டி	122.93